[1991 சனவரி 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 2146 மற்றும் 9381 ஆகியவை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வேகத் தடைகள் அமைத்தல்

*10290—திரு. டி. கே. பழனிச்சாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னையிலுள்ள பள்ளிகளுக்கு அருகில் இருந்த வேகத் தடைகள் அகற்றப்பட்ட இடத்தில் ரம்பிளர்ஸ் (Rumblers) அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

தச்சுப் பயிற்சி, இரும்பு வேலை—கருமார் பயிற்சி, கட்டிட வேலைப் பயிற்சி.

*5809—திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் தச்சுப்பயிற்சி, இரும்பு வேலை—கருமார் பயிற்சி, கட்டிட வேலைப்பயிற்சி போன்றவற்றை உருவாக்கிட அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் டிரைசம் திட்டத்தின்கீழ் கொத்தனார் தொழில் பயிற்சி 5 ஊராட்சி ஒன்றியங்களிலும், தச்சுத்தொழில் பயிற்சி 104 ஊராட்சி ஒன்றியங்களிலும் கருமார் தொழில் பயிற்சி 57 இடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

1991 சனவரி 24]

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நாட்களில் ஆசாரியார், கொத்தனார் போன்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பும், நல்ல ஊதியமும் கிடைக்கிறது. எனவே, இத்தகைய பயிற்சிகளை எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசு அமைக்க முன் வருமா என்றும், கொத்தனார் வேலைகளைப் பெண்கள் ஏற்றுச் செய்யலாம் என்பதால் அத்தகைய முறையிலே பெண்களுக்கு பயிற்சிகளை அளிக்க அரசு முன் வருமா என்றும் அறியவிரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எல்லா ஒன்றியங்களிலும் இதை அமல் படுத்துவது என்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. காரணம், அதிகமான நிதி ஒதுக்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இருக்கிற நிதியை வைத்துக்கொண்டு, எங்கெங்கே அதற்கு உரிய இடங்கள் இருக்கின்றனவோ அவைகளைப் பயன் படுத்தி இந்த ஆண்டு சற்றுக் கூடுதலாகவே அனுமதித்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு அதைக் கொஞ்சம் அதிகரிப்பதற்கான முன் வடிவைச் செய்யலாம்.

திரு. எஸ். என்.எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெண்களுக்குக் கொத்தனார் வேலைகளுக்கான வாய்ப்பைப் பற்றிக் கேட்டேன், அமைச்சரவர்கள் அதைப்பற்றிக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெண்களைச் சேர்க்கக் கூடாது என்பது அல்ல ; பெண்கள் மனுப் போட்டாலும் அவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் ஆணை வழங்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கெங்கே அப்படிப்பட்ட பெண்கள் அதற்கு முயற்சித்து வருகிறார்களோ அந்தப் பட்டியலைத் தந்தால் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு இப்பொழுதும் அரசு தயாராக இருக்கிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்ற தச்சுப் பயிற்சி, இரும்பு வேலை பயிற்சி, கருமார் பயிற்சி போன்றவைகளில் ஆண்டுதோறும் தேர்ச்சி பெற்று வெளி வருகின்றவர்கள் எத்தனை பேர்? அவர்களில் ஆண்டுதோறும் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்ற தகவலை அரசு தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலுக்கு, கொத்தனாருக்குப் பயிற்சி அளிப்பதைப்போல, கொத்தனாருக்கு வேண்டிய சித்தாள்களாகப் பெண்கள் தேவைப்படுகிறார்கள். எனவே—சித்தாள்களுக்கும் வேண்டிய பயிற்சியை அளிப்பதற்கும் அரசு ஏதாவது பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுதே செய்யத் தகுதி படைத்தவர்களுக்கே வேலை கிடைக்கவில்லை. எனவே அதற்குப் பயிற்சி அவசியமில்லை.

வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகக் குழு.

*8041—திரு. வே. இராமசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28–9–1985-க்கு முன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகக் குழு பணியாளர்களுக்கு வழங்கிய சம்பளம் மற்றும் சலுகைகளை முந்தைய அரசு ஆட்சேபனை செய்ததை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் தொழிலாளர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்த அரசு அமுல்படுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நிறுத்தி வைத்துள்ள சம்பளம் மற்றும் சலுகைகளை, தொடர்ந்து வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொடக்கக் கூட்டுறவு வங்கி ஊழியர்கள், மாநிலப் பதிவாளரின் ஆணைகளின்படி சம்பள விகிதத்தில் மாற்றம் செய்ய ஒப்புக்கொண்டதால், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல்செய்யும் கேள்விக்கு இடமில்லை.

1991 சனவரி 24]

திரு. வே. இராமசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 28-9-1985 ஆம் ஆண்டு அன்றிருந்த அரசால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் அமைப்பு கலைக்கப்பட்ட பொழுது— அதற்கு முன்னால் அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்தப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம் மறுக்கப்பட்டது. மறுக்கப்பட்ட பிறகு அது கோர்ட்டுக்குச் சென்று, அவர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டும், அது கொடுக்கப்படாமல் இருப்பதால் அதை அரசு இப்பொழுது அமல் நடத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பள விகிதம் மற்றும் அதிக பட்சச் சம்பளம் ஆகியவற்றை நிர்ணயித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1961—ல் பிரிவு 119 ஏ-ன் கீழ் 20-5-1975இல் மாநிலப் பதிவாளரால் ஆணைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆணைகளுக்கு மாறாக தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் சம்பள விகிதத்தை மாற்றியமைத்து முந்தைய நிர்வாகக் குழுவினர், அரசு நியமித்த தனி அலுவலர்கள் 1985 இல் பொறுப்பு ஏற்பதற்கு முன் 27-9-1985 அன்று ஆணைகள் பிறப்பித்தனர். முந்தைய நிர்வாகக் குழுவினரின் இந்த ஆணைகள் கூட்டுறவு நிறுவனங்களின் நலனைப் பாதிப்பதாக இருந்ததால், இந்தக் கூட்டுறவு நிறுவனங்களின் நலனை முன்னிட்டு முந்தைய நிர்வாகக் குழுவினர் பதவி விலகும்பொழுது மாற்றியமைத்த சம்பள விகிதங்களைச் செயல்படுத்த வேண்டாமெனத் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் தனி அலுவலர்கள் மாநிலப் பதிவாளரால் அறிவுறுத்தப்பட்டனர். அதன்படி தமிழ்நாடு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் (தனி அலுவலர் நியமன) அவசரச் சட்டம் 1985-ன்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள், முந்தைய நிர்வாகக் குழுவால் மாற்றியமைக்கப்பட்ட சம்பள விதிதங்களைச் செயல்படுத்தவில்லை. இந்த முடிவுக்கு எதிராக சேலம் மாவட்டத்திலுள்ள 52 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள், தொழிற் தகராறுகளை, கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் முன் கொண்டு சென்றனர். முந்தைய நிர்வாக இயக்குநர் குழுவால் மாற்றியமைக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் வழங்க தொழிலாளர் நீதிமன்றம் 22-9-1988 இல் ஆணையிட்டது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களுடைய சம்பளங்களின் உச்ச வரம்பு 1975 இல் நிர்ணயிக்கப்பட்டதால், சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும்படி மனுக்கள் வரப்பெற்றதால், இதனை ஆயும் பொருட்டு, மாநிலப் பதிவாளரால் ஒரு குழு அமைக்கப்பட்டது.